அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் : 02/2015

எனது இல.:- CS/V/SM/D/2009
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2015.03.25

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்/ பிரதேச செயலாளர்கள் மற்றும்
அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள்

# சாரதிகள் சேவைப் பிரமாணக் குறிப்பினை அமுலாக்கம் செய்தல்

1999.10.13 ஆம் திகதிய 1101/9 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதிய சாரதிகள் சேவைப் பிரமாணக் குறிப்பிற்குப் பதிலீடாக 2014.08.15 ஆம் திகதிய 1875/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட சாரதிகள் சேவையின் புதிய பிரமாணக் குறிப்பானது 2013.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலில் இருத்தல் வேண்டும்.

## 02. உள்ளீர்ப்பு

பிரமாணக் குறிப்பின் 13 ஆம் பிரிவுக்கமைய உள்ளீர்ப்புச் செய்தல்

சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியிலுள்ளவாறு சேவையிலுள்ள சகல அலுவலர்களும் தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பின்வரும் விதத்தில் புதிய தர முறைமைக்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

I. உள்ளீர்ப்புக் காரணமாக சம்பளவேற்றத் திகதியில் எதுவித மாற்றமும் மேற்கொள்ளப்படலாகாது என்பதுடன் உள்ளீர்ப்புக்கு முன்னர் ஏற்கனவேயிருந்த திகதியாக சம்பளவேற்றத் திகதியானது தொடர்ந்தும் மாற்றமுறாமல் இருத்தல் வேண்டும்.
II. ஒத்த சம்பளப் படிமுறை ஒன்றுக்கான உரித்துக் காரணமாக அடுத்த உயர் சம்பளப் படிமுறையில் எந்தவொரு ஊழியரும் அமர்த்தப்படலாகாது.

அதற்கிணங்க,

I. வகுப்பு II "ஆ" இலுள்ள ஊழியர்கள் தரம் III இற்கு.
II. வகுப்பு II "அ" இலுள்ள ஊழியர்கள் தரம் II இற்கு.
III. வகுப்பு I இலுள்ள ஊழியர்கள் தரம் I இற்கு.
IV. வகுப்பு 1 இல் ஆகக் குறைந்தது ஒன்பது (09) வருட திருப்திகரமான சேவைக்காலம் ஒன்றுடன் ஒன்பது (09) சம்பள ஏற்றங்களை உழைத்தும் ஏனைய சேவை நிபந்தனைகளை பூர்த்திசெய்துள்ளதுமான ஊழியர்கள் 2013.07.01 ஆம் திகதியிலிருந்து அதாவது இச் சேவைப் பிரமாணக் குறிப்பு அமுலுக்கு வரும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வண்ணம் விசேட தரத்திற்குள் உள்ளீர்ப்புச் செய்யப்படல் வேண்டும்.

**குறிப்பு 1**

வகுப்பு I இலிருந்து விசேட தரத்திற்கான உள்ளீர்ப்புக்கான விண்ணப்ப இல. 04 இல் தரப்பட்ட மாதிரிக்கமைய பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பங்களானவை திணைக்களத் தலைவர்/ அமைச்சுச் செயலாளரின் பரிந்துரையுடன் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 03. ஆட்சேர்ப்பு

பிரமாணக் குறிப்பின் 7 ஆம் பிரிவுக்கமைய குறித்த திணைக்களத் தலைவரின் பரிந்துரையின்படி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் மூலம் அனுமதிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, பதவிகள் வெற்றிடமானவுடன் அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை, வெற்றிட எண்ணிக்கையுடன் தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை ஆகியன பின்வரும் விதத்தில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் அறிக்கையிடப்படல் வேண்டும்.

(அ) ஓய்வு, சேவையை விட்டு விலகுதல், இறப்பு அல்லது பதவி வெறிதாக்கல் காரணமாக வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக அலுவலரின் பெயர் மற்றும் தரம், வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் பதவிகள் வெற்றிடமாகியுள்ள விதம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) மேலே “அ” இல் குறிப்பிடப்பட்ட காரணங்களிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் வெற்றிடமாகியுள்ள வெற்றிடங்கள் குறித்து வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் அத்தகைய பதவிகள் வெற்றிடமாகியுள்ள விதம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். மேலும், அத்தகைய அனுமதிகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் மேற்படி அனுமதியுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## 04. பதவியுயர்வு

2013.07.01 ஆம் திகதியிலிருந்து இணைந்த சாரதிகள் சேவையின் பதவியுயர்வுகள் இந்த பிரமாணக் குறிப்பின் 10 ஆவது பிரிவின் படி குறிப்பிடப்பட்ட பதவியுயர்வு திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்படும்.

திணைக்களத் தலைவர் / அமைச்சின் செயலாளரின் பரிந்துரையுடன் கீழே தரப்பட்ட மாதிரிக்கமைவாக ஒவ்வொரு தரத்திற்குமான பதவியுயர்விற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

I. சராசரி செயலாற்றுகையின் கீழ் தரம் III இலிருந்து தரம் II இற்கு பதவியுயர்விற்கான விண்ணப்ப படிவ இல. 01
II. சராசரி செயலாற்றுகையின் கீழ் தரம் II இலிருந்து தரம் I இற்கு பதவியுயர்விற்கான விண்ணப்ப படிவ இல. 02
III. சராசரி செயலாற்றுகையின் கீழ் தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு பதவியுயர்விற்கான விண்ணப்ப படிவ இல. 03
IV. தரம் I இலிருந்து விசேட தரத்திற்கு உள்வாங்குவதற்கான விண்ணப்ப படிவ இல. 04

குறிப்பு 2
2013.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு வகுப்பு I இல் 09 வருடகால சேவையினைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் விசேட தரத்திற்கு உள்ளீர்ப்புச் செய்யப்படுவதற்கு விண்ணப்ப படிவ இல. 04 இனைப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு 3
2013.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு வகுப்பு II “அ” இல் 09 வருடகால சேவையினைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்கள் தரம் I இற்கு பதவியுயர்த்தப்படுவதற்கு விண்ணப்ப படிவ இல. 02 இனைப் பயன்படுத்த வேண்டும்.

## 05. வினைத்திறன்காண் தடை

வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையானது இந்த பிரமாணக் குறிப்பின் 8 ஆவது பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்பட வேண்டும் .

அ. வினைத்திறன்காண் தடைப் பரீட்சை தொடர்பிலான அதிகாரி இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆவார் என்பதுடன் பின்வரும் அலுவலர்களை உள்ளடக்கியதும் இணைந்த

சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டதுமான நேர்முகப் பரீட்சை சபையினால் உரிய நேர்முகப் பரீட்சையானது நடாத்தப்பட வேண்டும்.

1. உரிய அலுவலர்கள் சேவையாற்றி வரும் திணைக்களத்தில் சேவையாற்றும் தலைவராக ஓர் நிறைவேற்று அலுவலர்.
2. மோட்டார் போக்குவரத்துத் திணைகளத்திலுள்ள மோட்டார் வாகனப் பரிசோதகர்.
3. போக்குவரத்துப் பொலிஸ் பிரிவிலுள்ள அலுவலர்.

ஆ. வினைத்திறன்காண் தடைக்காக நேர்முகப் பரீட்சை சபையினால் பரிந்துரைக்கப்பட்டதன் பின்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**06. ஏனையவை**

இணைநத சாரதிகள் சேவையின் உத்தியோகத்தர்கள் உரிய தினத்தில் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் பிரமாணக் குறிப்பின் பிரிவு 09 இற்கமைய அரசகரும மொழி மற்றும் வேறு அரச கரும மொழியில் மொழித்தேர்ச்சி பரீட்சை என்பவற்றில் சித்தியடைதல் வேண்டும்.

குறிப்பு 4
2007.07.01 ஆம் திகதிக்குப் பின்னர் இணைந்த சாரதிகள் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் மாத்திரமே நியமனத் திகதியிலிருந்து 05 வருடங்களிற்குள் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல. 1/2014 இலுள்ள ஏற்பாடுகளுக்கமைய மொழித் தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள வேண்டும்.

அ. சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியிலுள்ளவாறு பழைய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வகுப்பு I இற்கு பதவியுயர்த்தபட்டுள்ள அலுவலர்கள் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடையும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படல் வேண்டும்.
ஆ. தற்போது சேவையாற்றி வரும் அலுவலர்கள் தொடர்பில் சேவைப் பிரமாணக்குறிப்பு நடைமுறைக்கு வரும் திகதியிலிருந்து மூன்று (3) வருடங்கள் கொண்ட ஒரு சலுகைக் காலமானது பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளைப் பிரயோகிப்பதற்கு வழங்கப்பட வேண்டும்.

ஒப்பம் / ஜே. தடல்லகே
செயலாளர்
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு

**விண்ணப்பப் படிவ இல. 01**

## இணைந்த சாரதிகள் சேவையின் தரம் III இலிலுள்ள அலுவலர்களை சராசரி செயலாற்றுகையின் கீழ் தரம் II இற்கு பதவியுயர்வு செய்வதற்கான விண்ணப்பம்

**பகுதி I (அலுவலரினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்)**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ……………………………………………………...
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-
   ………………………………………………..............
3. தற்போது சேவையாற்றும் அலுவலகம் :- ……………………………………………...............
4. சேவையில் இணைந்த திகதி :- ………………………………………………...
5. இணைந்த சேவைகள் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ……………………......
6. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :- ……………………......
7. வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி:- …………………......
8. மட்டம் மூன்றில் மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொண்ட திகதி :-…………………
9. சேவையில் பத்து வருடங்கள் பூர்த்திசெய்த திகதி :- ………………………

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:……………………… …………………………………..
விண்ணப்பதாரியின்
கையொப்பம்

---

**பகுதி II**

**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

திரு ..................................................... இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவரது தனிப்பட்ட கோவைக்கிணங்க சரியானதாகும்.

1. பதவியில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :-………………………
2. தரம் III இனது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்த திகதி:- …………………………
3. வேறு அரச கரும மொழியின் மட்டம் மூன்றில் தேர்ச்சி அடைந்த திகதி :- …………………..
4. தரம் III இல் 10 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தை பூர்த்திசெய்துள்ள திகதி :- ……………………………….
5. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கமைய பதவியுயர்வு தினத்திற்கு முன்னராக 10 வருடத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலுங்கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளார் / வெளிப்படுத்தவில்லை.
6. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 10 வருடத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் ஈட்டிக்கொண்டுள்ளார் / ஈட்டிக்கொள்ளவில்லை.
7. I. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 10 வருடத்தில் அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளார் / பெற்றுக்கொள்ளவில்லை.

   II. சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளாராயின், பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தினங்கள் ………………………………………………

8. I. மேற்படி காலப்பகுதியில் அலுவலர் ஏதேனுமோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) ஆளாகியுள்ளாரா?
……………………………………………………………………………..

II. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று அல்லது சட்ட நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா? …………………………………

9. கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது வேறேதேனும் நியதிச் சட்ட சபை ஒன்றின் பணிக்காக அலுவலர் விடுவிக்கப்பட்டுள்ளராயின் உரிய காலப்பகுதி தொடர்பான விபரங்கள் :-
…………………………………………………….
…………………………………………………………………………………….....

இவ் அலுவலர் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் / பூர்த்திசெய்யவில்லை. ஆதலால், .................... ஆம் திகதி முதல் அமுலில் இருக்கக்கூடியதாக தரம் II இற்கான பதவியுயர்வை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

தாபனத் தலைவரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 9 வரையான தகைமைகள் பூர்த்திசெய்யப்படாவிட்டால் அவற்றினைக் குறிப்பிட்டனுப்பவும்.

தரம் II இற்கான பதவியுயர்வினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

அமைச்சு செயலாளரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

---

**விண்ணப்பப் படிவ இல. 02**

## இணைந்த சாரதிகள் சேவையின் தரம் II இலிலுள்ள அலுவலர்களை சராசரி செயலாற்றுகையின் கீழ் தரம் I இற்கு பதவியுயர்வு செய்வதற்கான விண்ணப்பம்

**பகுதி I - (அலுவலரினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்)**

1. முதலெழுத்துக்களுடன்பெயர் :- ………………………………………………………...
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-
   ……………………………………………….............
3. தற்போது சேவையாற்றும் அலுவலகம் :- ……………………………………………..............
4. சேவையில் இணைந்த திகதி :- ………………………………………………...
5. இணைந்த சேவைகள் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ……………………........
6. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :- ……………………........
7. இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி :-
   ……………………........
8. தரம் II / வகுப்பு II “அ” இல் ஒன்பது வருடங்கள் பூர்த்திசெய்த திகதி :-
   ……………………........

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:………………………

……………………………
விண்ணப்பதாரியின்
கையொப்பம்

## பகுதி II

**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

திரு ..................................................... இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவரது தனிப்பட்ட கோவைக்கிணங்க சரியானதாகும்.

1. தரம் II இற்குப் பதவியுயர்த்தப்பட்ட திகதி:- ……………………………….
2. இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்த திகதி:- ………………………………
3. தரம் II இல் 09 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தை பூர்த்திசெய்த திகதி:- ………………………
4. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கமைய பதவியுயர்வு தினத்திற்கு உடன் முன்னரான 09 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலுங்கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளார் / வெளிப்படுத்தவில்லை.
5. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் ஈட்டிக்கொண்டுள்ளார் / ஈட்டிக்கொள்ளவில்லை.
6. I. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளார் / பெற்றுக்கொள்ளவில்லை.

   II. சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளாராயின், பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தினங்கள்.
   ……………………………………………………………..
   (சாரதிகள் சேவையின் தரம் II இற்கான நியமன/ பதவியுயர்வுத் திகதியிலிருந்து)
7. I. மேற்படி காலப்பகுதியில் அலுவலர் ஏதேனுமோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) ஆளாகியுள்ளாரா?
   ……………………………………………………………………………..

   II. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று அல்லது சட்ட நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா? ………………………………
8. கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது வேறேதேனும் நியதிச் சட்ட சபை ஒன்றின் பணிக்காக அலுவலர் விடுவிக்கப்பட்டுள்ளராயின் உரிய காலப்பகுதி தொடர்பான விபரங்கள்:-
   ………………………………………………………………
   …………………………………………………………………………………………...

இவ் அலுவலர் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் / பூர்த்திசெய்யவில்லை. ஆதலால், .................... ஆம் திகதி முதல் அமுலில் இருக்கக்கூடியதாக தரம் I இற்கான பதவியுயர்வை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

தாபனத் தலைவரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 8 வரையான தகைமைகள் பூர்த்திசெய்யப்படாவிட்டால் அவற்றினைக் குறிப்பிட்டனுப்பவும்.

தரம் I இற்கான பதவியுயர்வினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

அமைச்சு செயலாளரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

**விண்ணப்பப் படிவ இல. 03**

## இணைந்த சாரதிகள் சேவையின் தரம் I இலிலுள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு பதவியுயர்வு செய்வதற்கான விண்ணப்பம்

**பகுதி I - (அலுவலரினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்)**

1. முதலெழுத்துக்களுடன்பெயர் :- ……………………………………………………..
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :- …………………………………………………...........
3. தற்போது சேவையாற்றும் அலுவலகம் :- ………………………………………………............
4. சேவையில் இணைந்த திகதி :- ………………………………………………...
5. இணைந்த சேவைகள் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ……………………...
6. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :- ……………………...
7. மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி :- ……………………...
8. தரம் I இல் ஒன்பது வருடங்கள் பூர்த்திசெய்த திகதி :- ……………………...

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:………………………

…………………………..
விண்ணப்பதாரியின் b
கையொப்பம்

---

**பகுதி II**

**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

திரு ..................................................... இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவரது தனிப்பட்ட கோவைக்கிணங்க சரியானதாகும்.

1. தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்ட திகதி:- ………………………………
2. மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை சித்தியடைந்த திகதி:- ………………………………

3. தரம் I இல் 09 வருட உயிர்ப்பான சேவைக் காலத்தை பூர்த்திசெய்த திகதி :-…………………

4. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கமைய பதவியுயர்வு தினத்திற்கு உடன் முன்னரான 09 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலுங்கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளார் / வெளிப்படுத்தவில்லை.

5. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் ஈட்டிக்கொண்டுள்ளார் / ஈட்டிக்கொள்ளவில்லை.

6. I. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளார் / பெற்றுக்கொள்ளவில்லை.

   II. சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகளை
   பெற்றுக்கொண்டுள்ளாராயின், பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கை
   மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தினங்கள்.
   ……………………………………………………..
   (சாரதிகள் சேவையின் தரம் I இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து)

7. I. மேற்படி காலப்பகுதியில் அலுவலர் ஏதேனுமோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) ஆளாகியுள்ளாரா?
   ………………………………………………………………………………..

   II. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று அல்லது சட்ட நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா? ………………………………….

8. கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது வேறேதேனும் நியதிச் சட்ட சபை ஒன்றின் பணிக்காக அலுவலர் விடுவிக்கப்பட்டுள்ளராயின் உரிய காலப்பகுதி தொடர்பான விபரங்கள்:- ………………………………………………………
   ……………………………………………………………………………………………...

இவ் அலுவலர் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் / பூர்த்திசெய்யவில்லை. ஆதலால், .................... ஆம் திகதி முதல் அமுலில் இருக்கக்கூடியதாக விசேட தரத்திற்கான பதவியுயர்வை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

தாபனத் தலைவரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 8 வரையான தகைமைகள் பூர்த்திசெய்யப்படாவிட்டால் அவற்றினைக் குறிப்பிட்டனுப்பவும்.

விசேட தரத்திற்கான பதவியுயர்வினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

அமைச்சு செயலாளரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

---

**விண்ணப்பப் படிவ இல. 04**

## 2013.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு இணைந்த சாரதிகள் சேவையின் தரம் I இல் 09 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்திசெய்துள்ள அலுவலர்களை விசேட தரத்திற்கு உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பம்

**பகுதி I - (அலுவலரினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும்)**

1. முதலெழுத்துக்களுடன்பெயர் :- ……………………………………………………..
2. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :-
   ………………………………………………...............
3. தற்போது சேவையாற்றும் அலுவலகம் :- ……………………………………………..............
4. சேவையில் இணைந்த திகதி :- ……………………………………………..
5. இணைந்த சேவைகள் நியமனக் கடிதத்தின் இலக்கம் :- ……………………........
6. நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :- ……………………........
7. வகுப்பு I இல் ஒன்பது வருடங்கள் பூர்த்திசெய்த திகதி :- ……………………........

மேலே என்னால் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானதும் சரியானதும் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:……………………

……………………………….
விண்ணப்பதாரியின்
கையொப்பம்

பகுதி II

**அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவரின் உறுதியுரை**

திரு/திருமதி/செல்வி ...................................................... இவ் அலுவலகத்தில் சேவையாற்றுவதோடு, மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அவரது தனிப்பட்ட கோவைக்கிணங்க சரியானதாகும்.

1. தரம் I இற்குப் பதவியுயர்த்தப்பட்ட திகதி:- ………………………………

2. சாரதிகள் சேவையின் தரம் I இலுள்ள 09 வருடகால உயிர்ப்பான சேவைக்காலம் ஒன்று 2013.07.01 ஆம் திகதியிலுள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது/ பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

3. அனுமதிக்கப்பட்ட செயலாற்றுகை மதிப்பீட்டு ஒழுங்கு விதிகளுக்கமைய பதவியுயர்வு தினத்திற்கு உடன் முன்னரான 09 வருட காலத்தில் திருப்திகரமான மட்டத்தில் அல்லது அதிலுங்கூடிய செயலாற்றுகையை வெளிப்படுத்தியுள்ளார் / வெளிப்படுத்தவில்லை.

4. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் சகல சம்பள ஏற்றங்களையும் ஈட்டிக்கொண்டுள்ளார் / ஈட்டிக்கொள்ளவில்லை.

5. I. மேற்படி தினத்திற்கு உடன் முன்னரான 09 வருடத்தில் அரைச் சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளார் / பெற்றுக்கொள்ளவில்லை.

   II. சம்பளமற்ற மற்றும் அரைச் சம்பளத்துடனான விடுமுறைகளை பெற்றுக்கொண்டுள்ளாராயின், பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறைகளின் எண்ணிக்கை மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட தினங்கள். …………………………………………………………...
   (சாரதிகள் சேவையின் தரம் I இற்கான பதவியுயர்வுத் திகதியிலிருந்து)

6. I. மேற்படி காலப்பகுதியில் அலுவலர் ஏதேனுமோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர) ஆளாகியுள்ளாரா?
   ..........................................................................................................................

   II. அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஒன்று அல்லது சட்ட நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படுகின்றதா? ....................................................

9. கூட்டுத்தாபனம் ஒன்றின் அல்லது வேறேதேனும் நியதிச் சட்ட சபை ஒன்றின் பணிக்காக அலுவலர் விடுவிக்கப்பட்டுள்ளாரயின் உரிய காலப்பகுதி தொடர்பான விபரங்கள் :- ……………………………………………………………
   ………………………………………………………………………………………

இவ் அலுவலர் சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் / பூர்த்திசெய்யவில்லை. ஆதலால், 2013.07.01 ஆம் திகதி முதல் அமுலில் இருக்கக்கூடியதாக விசேட தரத்திற்கான உள்ளீர்ப்பினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

தாபனத் தலைவரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)

குறிப்பு: மேலே குறிப்பிடப்பட்ட 1 முதல் 7 வரையான தகைமைகள் பூர்த்திசெய்யப்படாவிட்டால் அவற்றினைக் குறிப்பிட்டனுப்பவும்.

2013.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வண்ணம் விசேட தரத்திற்கான பதவியுயர்வினை நான் பரிந்துரைக்கின்றேன் / பரிந்துரைக்கவில்லை.

திகதி:…………………….

அமைச்சு செயலாளரின் கையொப்பம்:
பெயர்:
பதவி:
(பதவி முத்திரை)